[30th November 1970

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : நான் பம்பாய்க்கு எஸ்டிமேட் கமிட்டியோடு போகவில்லை. ஆனால் தொழிலைப் பார்க்கச் சென்றிருந்தேன். அப்போது தான் இந்தத் தகவலேகூட எனக்குக் கிடைத்தது. சிறு தொழில் வளர்ச்சிக்காக என்று ஒரு தனி வாரியத்தை அமைத்து, அதன் மூலமாக உற்பத்தி செய்த பொருளை விற்பனை செய்வதற்கும், மூலப் பொருள்களைத் தேடிக் கொடுப்பதற்கும், உள்நாட்டில் மட்டுமின்றி வெளிநாட்டிலும் தொடர்பு கொண்டு அந்த வாரியம் உதவி செய்து வருவதை நான் அறிந்தேன். அதற்குப் பின்னால்தான் நம் மாநிலத்தில் அம்மாதிரியான வாரியம் ஒன்றைத் துவக்க வேண்டும் என்று முடிவெடுத்துத் துவக்கியிருக்கிறோம். மூலப் பொருள் பற்றாக் குறையைவிட அதைப் பகிர்ந்து கொடுப்பதில் தொல்லைகள் இருக்கக் கூடாது என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்துதான் இந்த முடிவை எடுத்தது. கல்கத்தாவில் உள்ள ஜே. பி. சி. என்கிற ஜாயிண்ட் பிளானிங் கமிட்டியில் மூலப் பொருள்களை எப்படிப் பிரித்துக் கொடுப்பது என்று முடிவெடுக்கும்போது, அப்படிப்பட்ட மூலக் கொள்கையை மத்திய அரசு வகுக்கும்போது மாநில அரசுக்கும் அதில் ஓரளவு பங்கிருக்க வேண்டும்; அவர்களையும் சேர்த்துக் கொண்டு எப்படி மூலப் பொருள்களை விநியோகிப்பது என்று முடிவெடுக்க வேண்டும் என்று மத்திய அரசுக்கு எழுதியிருக்கிறோம். மத்திய அரசு அதனை இது வரையில் ஒப்புக்கொள்ளவில்லை. மூலப் பொருள் பற்றாக்குறையைப் பற்றி மத்திய அரசு தீவிர கவனம் செலுத்த வேண்டும் என்ற நம் கருத்துக்கு, இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துக்களும் பேருதவியாக இருக்கும் என்று கருதுகிறேன். மத்திய அரசிடம் நாம் சொல்லுகிறபோதெல்லாம் இதைச் சொல்லிவருகிறோம். இந்த மூலப் பொருள் கிடைக்காமல் கஷ்டப்படுகிற நிலைமை என்பது சிறு தொழில்களுக்கு மட்டுமல்ல, அரசாங்கம் கட்டுகிற கட்டிடங்களுக்கே கூட மூலப் பொருள் கிடைக்காத நிலைமை இருக்கிறது. அரசாங்கக் கட்டிடங்கள், பள்ளிக் கட்டிடங்கள் ஆகியவைகளுக்குத் தேவையான மூலப் பொருள் தற்போது இல்லாமல் இருக்கிறது. அதே போல் மின்சார வாரியம் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டிய திட்டங்களுக்குக்கூட மூலப் பொருள் இல்லை. இதைப்பற்றி இந்தியப் பிரதமரிடம்கூட சொல்லியிருக்கிறோம். திட்டத்திலே கோளாறு இருப்பதை நிச்சயம் உணர்ந்தாக வேண்டும் என்று வலியுறுத்திய பிறகு, இப்போது வெளிநாட்டிலிருந்து ஓரளவு இறக்குமதி செய்ய ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

Standard Motor Factory, Vandalur

*23. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether the Government propose to run the Standard Motor Factory, Vandalur as a State Government Enterprise ; and

(*b*) if so, the details thereof ?

30th November 1970]

வண்டலூர் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலை

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வண்டலூர் ஸ்டாண்டர்டு மோட்டார் தொழிற்சாலையை மாநில அரசு நிறுவனமாக ஏற்று நடத்த அரசு உத்தேசித்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) வும் (இ) யும் : மத்திய அரசு வர்கீஸ் குழுவின் ஆய்வறிக்கையை பரிசீலிக்கிறது. மத்திய அரசின் முடிவு எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ஜி. சுவாமிநாதன் : நமது மாநில அரசு இதை எடுத்து நடத்தலாம் என்று உத்தேசித்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : இப்போதிருக்கிற சட்டப்படி, ஐ.டி.ஆர். ஆக்ட் பிரகாரம் மத்திய அரசுதான் இதுபற்றி முடிவு எடுக்க வேண்டும். நாம் அந்தத் தொழிற்சாலை மூடப்பட்ட ஒரு வார காலத்திற்குள்ளாக வர்கீஸ் தலைமையில் இந்தக் குழுவை அமைத்தால், அந்தக்குழுவின் அறிக்கை இப்போது சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையின் பேரில் நம்முடைய கருத்தைக் கேட்டார்கள். அதைச் சொல்லியிருக்கிறோம். (1) மத்திய அரசே இதை ஏற்று நடத்தலாம், அல்லது (2) மாநில அரசு தனியார் துறையோடு சேர்ந்து நடத்துவதற்கு மத்திய அரசு அனுமதி கொடுக்கலாம். அல்லது (3) மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நடத்தலாம் என்ற இந்த மூன்று யோசனைகளைத் தெரிவித்திருக்கிறோம் அதைப்பற்றி அவர்கள் விரைவில் முடிவு எடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறோம்

திரு. ஜி. சுவாமிநாதன் : வர்கீஸ் அறிக்கையைப் பொறுத்த வரையில் நம்முடைய மாநில அரசு ஏற்று நடத்தினால், லாபகரமாக நடத்தலாம் என்று ஏதாவது கருத்து அந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : லாப நஷ்டத்தைப்பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியமே இல்லை. தென் மாநிலங்களில் இதைப்போன்ற ஒரு தொழிற்சாலை இல்லை. நாம் பெற்றிருக்கிறோம். லாபத்தோடு நடத்த வேண்டுமென்ற நோக்கத்தில்தான் மத்திய அமைச்சர்களோடு பேசும்போது சொல்கிறோம். இப்போது 3500 கார் உற்பத்திக்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் சிறுகார் உற்பத்தித் திட்டம் என்று ஒரு திட்டம் போட்டிருக்கிறார்கள். அதில் ஒரு பகுதியைத் தமிழகத்திற்குத் தந்து 10 ஆயிரம் கார் என்று, உற்பத்தியை அதிகப்படுத்த, லைசன்ஸ் கபாசிட்டியை அதிகமாக அளிக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். அதிகப்படுத்தினால் நிச்சயமாக லாபத்தோடு நடைபெறும். கடந்த காலத்தில் நிர்வாக ஊழல்கள்

அல்லது சில தவறுகள் ஏற்பட்டிருக்கலாம். அவற்றை வேண்டுமானால் காரணமாகக் காட்டலாமே தவிர லாபம் இல்லை என்று சொல்வதற்கில்லை.

THIRU S. NARAYANASWAMY : Is it possible for the Government of Tamil Nadu to impress upon the Central Government the need to take a quick decision in the matter, as it is tending to spoil the climate for industrialisation of Tamil Nadu, for which the State Government cannot be held solely responsible ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : தமிழ் நாட்டின் சிறந்த தொழில் அதிபர்களில் ஒருவர் இந்த அவையில் இந்தக் கருத்தைச் சொல்லியதனால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. மத்திய அரசு இதனுடைய அவசரத் தன்மையை உணர்ந்து கொள்ளும் என்று நினைக்கிறேன். ஆயிரக் கணக்கான தொழிலாளர்கள் வறுமையில் கடந்த ஆறு மாத காலமாக வாடி, பார்க்க முடியாத நிலையில் இருப்பதை இந்த அரசு மனப்பூர்வமாக உணருகிறது. இந்த அரசைப் பொறுத்த வரையில் எவ்வளவு துரிதமாக நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதைச் சொன்னேன். ஒரு வாரத்திற்குள் ஒரு குழுவைப் போட்டோம். அறிக்கை தயாராகி விட்டதாகச் சொன்னதும் அது நம்மிடம் வந்து சேருவதற்குக் கால தாமதம் ஏற்படுமோ என்று கருதி, நாமே ஒரு அரசு அலுவலரை இங்கிருந்து டெல்லிக்கு அனுப்பி அதை வாங்கி வரச் சொல்லி, ஒரே நாளில் அதற்கான கருத்தையும் கூறி மறுநாள் ஒரு அலுவலரின் மூலம் அதை அனுப்பி வைத்தோம். மத்திய அரசில் எதோ ஒரு சங்கடம் அல்லது யோசனை இருப்பதுபோலத் தோன்றுகிறது. யார் கூறுவதையும் கருத்தில் கொள்ளாமல், தொழில் வளர்ச்சி, தொழிலாளர் நிலைமை இவற்றைக் கருத்தில் கொண்டு இந்தத் தொழில் திட்டத்தை நடத்த உதவி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு : மத்திய அரசிற்குத் தெரிவித்த மூன்று யோசனைகளில் ஒன்று, அரசு தனியாருடன் சேர்ந்து நடத்தலாம் என்பதாக அமைச்சர் தெரிவித்தார்கள். அப்படியானால் ஏற்கெனவே தொழிற்சாலையை இது வரை நடத்தி வந்த அந்தக் கம்பெனியுடனா அல்லது வேறு யாரேனும் தனியார் அரசுடன் சேர்ந்து நடத்துவதற்கு கருத்து தெரிவித்திருக்கிறார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : யார் யாரைச் சேர்ப்பது என்பதை அனுமதி கிடைத்ததற்குப் பிறகு முடிவு செய்ய வேண்டும். ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலைக்கு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியிலிருந்து 1 1/2 கோடி ரூபாய் கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இங்கே இருக்கிற பிரிட்டிஷ் நாட்டைச் சேர்ந்த லேலண்ட் கம்பெனி கிட்டத் தட்ட 30 சதவிகிதப் பங்குகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்கள். அவர்களுடன் பேச்சு வார்த்தை நடத்தினோம். அவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு அரசு-உதவி செய்ய முன்வருமானால், பணம் தருவதற்கும், வெளிநாட்டுச் செலாவணி பெற்றுத் தருவதற்கு உதவினால் தாங்கள் ஒத்துழைப்புத் தருவதாகவும் சொல்கிறார்கள்.

30th November 1970]

அதனால்தான் பொதுவாக தனியார் என்று சொல்லியிருக்கிறோம். இப்போது இருக்கிறவர்கள் நல்ல முறையில் நடத்த முன்வந்தால், அவர்களை ஏற்றுக்கொள்வதற்குத் தடை இருக்காது.

Alcoholic Drinks

*24. Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state :

(*a*) whether there is any proposal with the Government to start a brewery for the manufacture of alcoholic drinks in the State ; and

(*b*) if so, the details thereof ?

வெறியம் கலந்த பானங்கள்

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வெறியம் கலந்த பானங்கள் தயாரிக்கும் வடிப்பாலை ஒன்றை (Brewery) இம்மாநிலத்தில் தொடங்குதற்குரிய செயற் குறிப்பு ஏதேனும் அரசினிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) வினுவுக்கு இடமில்லை.

THIRU D. SANTOSHAM : Sir, the area around Kodaikanal Road is noted for its rich harvest of grapes. Some years ago, I knew there was a proposal to set up a plant for the manufacture of grape wine. May I know what happened to that proposal ? Has the proposal been dropped ? Were its prospects fully gone into ?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : அரசாங்கமே நடத்துவது என்பது பற்றிய திட்டம்—ப்ரபோசல்ஸ்—எதுவுமில்லை என்று தான் பதில் சொன்னேன். ஆனால் தனியார் துறையில் இது போன்ற தொழிற் சாலை ஒன்றைத் துவங்க வேண்டும் என்று கோரி பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே, குறிப்பாக இந்த ஆட்சிப் பொறுப்பேற்பதற்கு முன்னா லேயே ஒரு மனு போடப்பட்டது. அப்போது இருந்த ஆட்சி அதைப் பற்றிப் பரிசீலித்து, அதற்கு அனுமதி கொடுக்க வேண்டும்; அப்படி அனுமதி கொடுக்க வேண்டுமென்றால், மதுவிலக்குச் சட்டத்தில் திருத் தம் கொண்டுவர வேண்டும்; அவ்வாறு கொண்டுவருவதும் நியாயம் தான் என்று முடிவு செய்திருந்தாலும்கூட, எப்படியோ அது நிறை வேற்றப்படாமலேயே இருந்தது. இப்போதைய அரசு அதற்கு ஒரு முடிவெடுத்து அது குறித்துச் சட்ட மன்றத்திலே ஒரு மாசோதாவைப் பிரேரேபிக்க இருக்கிறது. அதுபற்றி இப்போதே ஏராளமான மனுக் கள் வந்துகொண்டிருக்கின்றன. எனவே இந்த மசோதாவை நிறை வேற்றிய பிறகு, அந்தத் தொழிற்சாலைக்கான அனுமதி கொடுப்பது பற்றிப் பரிசீலிக்கலாம்.